**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மதுராந்தகம்.**

**அ.வ.எண். 74/2025**

**இந்த நீதிமன்றத்து எழுத்தர் திரு.J.மோகன் என்பவரால் முறையாக பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பு 1ஆம் சாட்சியத்தின் வாக்குமூலம் 1873ம் ஆண்டு 10 வது சட்டத்தின் வரைமுறைகளுக்குட்பட்டு 2026 ம் ஆண்டு ஜூன் மாதம் 3 ம் நாள் பதிவு செய்யப்பட்டது.**

| | |
|---|---|
| **பெயர். ஜெயம் என்கின்ற ஜெயந்தி** | **வயது** |
| **த.பெ(அ) க.பெ திருமலை** | **மதம்** |
| **கிராமம்** | **வட்டம்** |

**வா.சா.1 முதல் விசாரணை**

**03.06.2026**

இந்த வழக்கில் நான் **1**ம் வாதி ஆவேன். நான் எனது முதல் விசாரணையை சத்திய பிராமாண வாக்குமூலமாக இன்று தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான்.

1. **19.01.2021** தேதியில் எனது பெயரில் பெறப்பட்ட கிராமநத்த பட்டா எண்.220 அசல் **வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. எனது பெயரில் பெறப்பட்ட வீட்டு வரி ரசீது (2 எண்ணிக்கை) அசல் **வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3. எனது பெயரில் பெறப்பட்ட மின் கட்டண அட்டை அசல் **வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

4. எனது பெயரில் பெறப்பட்ட மின் கட்டண ரசீது ( 2 எண்ணிக்கை) அசல் **வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

5. 16.09.2025 தேதியில் எனது பெயரில் பெறப்பட்ட பட்டா எண்.220 கணினி நகல் **வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

6. எனது கணவர் பெயரில் உள்ள பட்டா எண்.233 கணினி நகல் **வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

( வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க மேலும் ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டி முதல் விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)